435

போதனா விஷய பூங்கொத்து

மாதமொருமுறை மலரும்

Venkatachalam S. 1941-43.

Editor … Publisher … A. Lourduswami, B.A., L.T.
… Training School, Trichinopoly.

JL
ஊ211, M11 …
N46 · 37.4
210006

435
28 NOV 1946
MA…

… ஒக்டோபர் 1946 மலர் 4

… ஆசிரியப்பயிற்சிமுறை பாடசாலை, திருச்சினுப்பள்ளி.

வருஷ சந்தா ரூபாய் 1. தனிப்பிரதி அணா 2.

போதனு விஷயப் பூங்கொத்து

கொத்து 37] 15 ஒக்டோபர் 1946 [மலர் 4

பத்திராதிபர் குறிப்புகள்

T. S. L. C. பரீட்சை, 1947.—இப்பரீட்சை 1947-ம் ஹு மார்ச்சு-மீ 31-ம் தேதியிலிருந்து தொடங்கி நடைபெறும். பரீட்சை கால அட்டவணை முதலியன பிறகு தெரிவிக்கப்படும்.

ஸெக்கண்டரி கிரேடு எமெர்ஜென்ஸி வகுப்பு பரீட்சை (Emergency Secondary Grade) 1947-ம் ஹு ஜூன்-மீ 30-ம் தேதியிலிருந்து தொடங்கி நடைபெறும். இதற்கும் பரீட்சை கால அட்டவணை முதலியன பிற்பாடு தெரிவிக்கப்படும்.

நம் பாடசாலைத்தினக் கொண்டாட்டம்.—இவ்வைபவம் இம்மாதம் 30-ம் தேதியன்று நடைபெறும். அவ்வமயம் நமது பழைய மாணவர்களும் ஏனைய நேயர்களும் விஜயம்செய்து ஷை வைபவத்தைச் சிறப்பிக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

சென்னை கல்வி இலாகா

[Fort St. George Gazette Part I-B dated 17-9-'46. Page 411.]

Higher Elementary Grade Teachers and T. S. L. C. Secondary Grade Examination.

ஹையர் எலிமெண்டரி கிரேடு ஆசிரியர்கள், ஸெக்கண்டரி கிரேடு T. S. L. C. பரீட்சை எழுதுவதைப்பற்றிய அரசாங்க அறிக்கையின் சாராம்சம் பின்வருமாறு :—

அரசாங்க நிபந்தனைகளின்படி ஷை பரீட்சை எழுத அனுமதிக்கப்பட்டுள்ள ஹையர் கிரேடு ஆசிரியர்கள் 1947-ம் ஹு மார்ச்சு-மீ 31-ம் தேதியிலிருந்து தொடங்கி நடைபெறும் ஷை T. S. L. C. ஸெக்கண்டரி கிரேடு பரீட்சையில் எழுதவேண்டும்.

ஷை பரீட்சை எழுத, பரீட்சைக் கட்டணம் (The Examination Fee for the whole Examination) ரூ. 10. இந்தக் கட்டணத்தை அபேக்ஷகர்கள் அரசாங்க கஜானுவில் செலுத்தி, ரசீதையும், தங்கள் தங்கள் T. S. L. C. (ஹையர் எலிமெண்டரி கிரேடு) ஸர்ட்டிபிக்கேட், S. S. L. C. ஸர்ட்டிபிக்கேட் அல்லது மெட்ரிகுலேஷன் ஸர்ட்டிபிக்கேட், ஆகியவற்றையும், தங்கள் **அப்ளிகேஷனுடன்** D. E. O. அவர்களுக்கு அனுப்பி வைக்கவேண்டும்.

அப்ளிகேஷன் பாரங்களை (Application Forms) ஜில்லா கல்வி அதிகாரி ஆபீஸிலிருந்து பெற்றுக்கொள்ளத்தகும்.

ஜில்லா கல்வி அதிகாரிகள், ஷை அப்ளிகேஷன்களை 1946-ம் ஞூ நவம்பர்-மீ 11-ம் தேதிக்குள், கல்வி கமிஷனர் அவர்களுக்கு (Secretary to the Commissioner for Govt. Examinations) அனுப்பிவிடு வார்களாதலால், அபேக்ஷகர்கள் தங்கள் அப்ளிகேஷனை முன்னதாகவே D. E. O. அவர்களுக்கு அனுப்பிவிடவேண்டும்.

ஷை பரீட்சை எழுதுபவர்கள் தாங்கள் பரீட்சை எழுத விரும்பும் ஸெண்டரையும் தெரிவித்துவிடுவதுடன், பரீட்சையைக் கண்காணிக்கும் Chief Superintendent அவர்களிடம் பரீட்சைகாலத்தில் ஸமர்ப்பிப்ப தற்கு, அத்தாட்சிப் பத்திரம் (Identification Certificate) ஒன்றை யும் அந்தந்த டெப்யூடி இன்ஸ்பெக்டரிடமிருந்து பெற்று, பரீட்சை எழு தும் ஸெண்டருக்குக் கையுடன் கொண்டுவரவேண்டியது அவசியமாகும்.

சரித்திரத்தில் கால உணர்ச்சி

(கொத்து 37, மலர் 3 பக்கம் 60-ன் தொடர்ச்சி)

[N. R. Najundeswaran]

காலத்தை ஒரு கோடு என ரூபிகரித்துக்கொள்வோம். பல சம்ப வங்கள் நமக்கு முன் நிகழ்ந்திருக்கின்றன. பல வீரர்களும் அரசர்களும் நமக்குமுன் தோன்றியிருக்கிறார்கள். இக்காலக் கோட்டில் எவ்விடத்தில் அவர்கள் தோன்றினார்கள் என்று குறிக்க வேண்டும். அதாவது அவர்கள் தோன்றிய காலம் இனி நமக்கும் அந்த சம்பவம் நடந்த காலத்துக்கும் உள்ள தூரம் தெரியவேண்டும். (உ-ம்) 1630 கி. பி. இது ஒரு குறிப்பிட்ட இடம் Location. சிவாஜி 316 வருஷங்களுக்கு முன்னுள்ளவர். நாம் சிவாஜிக்கு 316 வருஷங்களுக்கு பின்பே உள்ளவர்களென்றும் அறியலாம். இந்தக் காரணத்தால் நமக்கு என்ன லாபம். வெறும் கழித்தல் கணக்குத் தான். ஆனால் இந்தத் தேதி முக்கியமாய் இருப்பதற்கு வேறு காரணங் களுமுண்டு. சிவாஜி, அக்பர் முதலியோர்களின் தேதி அவர்கள் காலத்து நாகரீகம், வாழ்க்கைமுறை, கல்விநிலை இவைகளை திட்டவட்டமாய்க் காட்டு கின்றன. தற்கால சமுதாய நாகரீக நிலைக்கும் சிவாஜி கால நிலைக்கும் உள்ள வேறுபாட்டை உணரவேண்டும். நம்முடைய நாகரீகத்தையும் அக்காலத் துடன் சம்பந்தப்படுத்தி பார்க்கவேண்டும். வெறும் தேதிகளையும் காலக் கோடுகளையும் வெளியிடுவதில் பிரயோஜனமில்லை. தேதிகள் தன்னிலே கால உணர்ச்சிக்கு ஆதாரமாயிருந்தாலும் அவற்றை சம்பவங்களோடு சம்பந் தப்படுத்தியறியாவிடில் கால உணர்ச்சி ஏற்படாது.

நமது பாடப் புத்தகங்களில் நிறைய தேதிகளை கொடுத்துவிடுகின் றோம். தேதிகள் அதிகமாகும்பொழுது படிப்பவர்களுக்கு சலிப்பாகின் றது. ஆனால் முழுவதும் தேதிகளை (Dates) கை நெகிழவும் விடக் கூடாது. ஏனெனில் இவைகள் காலமென்றும் ரஸ்தாவின் மைல் கற்களாக உதவுகின்றன. ஆகையால் மிதமான தொகையில் தேதிகள் கொடுக்கப்

படவேண்டும். 606 A. D. ஹர்ஷர். இக்காலத்திற்கு முன்னிருந்த நாகரீகம், நமது கால நாகரீகம் இவற்றை வைத்து ஆராயவேண்டும்.

இதனால் கால உணர்ச்சி ஏற்படும் :—

இந்தக் கால உணர்ச்சியை ஏற்படுத்துவதற்கு நாம் வகுப்புகளில் உபயோகிக்ககூடிய உபகரணங்களைப்பற்றிப் பார்ப்போம் :—

1. Time line :—காலக்கோடு. இந்திய சரித்திரம் முழுவதிலுமுள்ள முக்கிய சம்பவங்களையும் பாத்திரங்களையும் வருடக் காலக்கிரமத்தில் எழுதுதல். (Chronological order) இதைப் பார்த்த அளவில் இக்காலமட்டுமுள்ள முக்கிய சம்பவங்கள் பாலர்கள் சுளுவில் அறிந்து கொள்ள முடியும். முகலாய ராஜ்யம் மகாராஷ்ட்ர ராஜ்யம் இவைகள் தோன்றிய குன்றிய வரலாற்றைக் கோடுகள் மூலம் விளக்கலாம். ரேகா படங்கள் (Graphs) இந்திய தேச சரித்திரமானது மற்ற தேசங்களைப் போன்றதல்ல, ஒரே காலத்தில் பல்வேறு அரசர்கள் பல்வேறு இடங்களில் அரசாண்டு இருக்கின்றனர். ஆகவே சரியான சரித்திர உணர்ச்சியை ஏற்படுத்தும் பொருட்டு ஒரே காலத்தில் நடந்த சம்பவங்களை ஒப்பிட்டுக் கற்றுக்கொடுக்கவேண்டும். சிலர் வட இந்திய சரித்திரத்தை மாத்திரம் அதிகமாகக்கூறி தென்னிந்திய சரித்திர நிகழ்ச்சிகளை வெகு சுருக்கமாய்க் கூறிவிடுகின்றனர். இது தவறு. தகுந்த சமயங்களில் வட இந்திய, தென்னிந்திய சரித்திர நிகழ்ச்சிகளை ஏக காலக்கிரம முறையில் ஒற்றுமைப் படுத்தி போதனை செய்யவேண்டும். இதற்காக Comparative time lines உபயோகிக்கவேண்டும். இதனால் ஒரே முயற்சியில் வட இந்திய தென்னிந்திய நாகரீக நிலையைக் குறிப்பிட்ட ஒரு காலத்தில் அறிந்து கொள்ளமுடியும்.

சரித்திர போதனையின்போது உலக சரித்திரத்தோடு தேசீய சரித்திர நிகழ்ச்சிகளை ஒன்றுபடக் கூறினால் அதிக கால உணர்ச்சி ஏற்படும்.

(உ-ம்) 400 கி. பி. யில் இங்கிலாந்தில் பிரிட்டன் ஜனங்கள் அநாகரீக முள்ளவர்களாய் வாழ்ந்திருக்க அதே சமயத்தில் இந்தியாவில் சந்திர குப்த விக்கிரமாதித்யன் காலத்தில் காளிதாசன் என்னும் புலவர் சகுந்தலை என்ற இலக்கிய நூலை எழுதி வெளியிட்டிருக்கிறார். நாகரீகத்தின் நிலைமையைக் கவனியுங்கள். ஒரு வரிசையில் இந்திய சரித்திர சம்பவங்களின் நிகழ்ச்சிகளை போதிப்பதற்கு எதிராக அதே தேதியில் நடந்த உலக சரித்திர சம்பவங்களையும் குறிப்பைக் காட்டுவது உயர்தர ஆரம்ப வகுப்புகளில் அதிக நலமாகும்.

இறுதியாக வெறும் தேதிகளைக் கொடுத்து மாணவர்களைப் பாராப் பாடம் செய்யச் சொல்வதினால் கால உணர்ச்சி ஏற்படாது. ஒவ்வொரு தேதிகளில் நடந்த சம்பவங்களை விளக்கி தற்காலத்தோடு ஒப்பிடவேண்டும். சரித்திர போதனையில் அப்பொழுது கவனிக்கத்தக்க விஷயம் ஒன்றுண்டு. தற்கால நிகழ்ச்சிகள், நாகரீக நிலை, சமூக வாழ்க்கை முதலியவற்றை ஒப்பிட்டே முற்கால சம்பவங்களை அல்லது ப்ரமுகர்களைக் கற்

றுக்கொடுக்க வேண்டும். 17-ம் நூற்றாண்டில் பிரான்ஸிஸ் டிரேக் (Drake) என்பவர் உலகத்தை முழுவதும் சுற்றி வந்தார். இதற்கும் இக்காலத்தில் ஒருவர் உலகத்தைச் சுற்றி வந்ததற்கும் வேற்றுமையில்லை. இதில் எது மகிமை பொருந்தியது? என்? இவ்வண்ணம் மாணவர்களிடம் சிதானித்து மதிப்பிடும் பழக்கத்தை ஏற்படுத்த வேண்டும். ஆகவே கால உணர்ச்சி சரித்திர போதனையில் அவசியமானதாலும் அதை நாம் நன்கு மாணவர்களுக்குப் பயன் படுத்தல் வேண்டும். நமது நாட்டின் முற்கால நாகரீக நிலையை அறியவும் மாணவர் தேசபற்றுடையவர்களாகவும் உதவு கிறது. தேச சரித்திர போதனையின் பலனும் பெறுகின்றனர்.

பாடக்குறிப்பு
[S. Muthuveeru]

பாடம்: இயற்கை. **வகுப்பு 5**

நோக்கம்:—மீனின் தேக அமைப்பையும் அது நீரில் வாழ்வதற்கேற்ப அமைந்திருப்பதையும் அறிய வைத்தல்.

உபகரணங்கள்:—ஒரு அகண்ட வாயுள்ள கண்ணாடிப் பாத்திரத்தில் குளத்து ஜலம், மீன், சோற்றுப் பருக்கைகள், ஜலத்தில் ஊறின அவரை விதை [கண்ணாடிப் பாத்திரத்தில் அடியில் மணலைப்போட்டு அதில் சிறிது வேலம்பாசியை நட்டு குளத்து ஜலத்தை அதில் ஊற்றி, பின் மீனை அதில் விடவும்]

பீடிகை:—விஷயம் ஜலத்தில் வாழும் சில பிராணிகளைக் கூறச் செய்து, பின், மீன் என்பதை அவர்கள் மூலம் வருவித்து, மீன் உணவாக உபயோகப்படுகிறது, சிலர் மீன் எண்ணெயை மருந்தாக உட்கொள்கின்றனர்

(முறை) பீடிகையின் மூலம் பிள்ளைகளின் முன்னறிவைச் சோதித்தல்.

நோக்க வெளியீடு: இன்று மீனின் தேக அமைப்பையும் வாழும் முறையையும்பற்றி படிப்போம்.

விஷயம்	முறை
(1) வாழும் இடம்-நீருள்ள இடங்கள்.	(1) கேட்டு வருவித்தல்
(2) தேக அமைப்பு-படகுபோல் கைகால்கள் கிடையாது-கண்கள் இரண்டு.	(2) பாத்துச் சொல்லச் செய்தல்.
(3) தோல்-சரீர முழுவதும் செதில்கள் உள்ளன. இவற்றின் மேல் வழவழப்பான திரவம் உள்ளது. அதனால் மீன் ஜலத்தில் ஊறிப்போவதில்லை.	(3) மீனை மாணவர்கள் கையால் தடவிப் பார்த்து சொல்லச் செய்தல் ஊறின அவரை விதைகளை காட்டி அவற்றிற்கும் மீன் தண்ணீரில் கிடப்பதற்கும் உள்ள வேறுபாட்டை மாணவர்கள் மூலம் வருவித்தல்.

(4) நகருதல்-நீந்துகிறது; அதற்கு உதவி துடுப்புகள்-வால் பெரிய துடுப்பு; வேறு ஆறு துடுப்புக்கள் உள்ளன.

(4) கண்ணாடிப்பாத்திரத்திற்குள் நகருவதை உற்றுப் பார்க்கும்படி செய்தல்.

(5) ஆகாரம்-அழுக்கு, மிருதுவான வஸ்துக்கள், புழு பூச்சிகள்.

(5) சோற்றுப் பருக்கையைப் போட்டு மீன் அதை தின்னும்போது நிதர்சனமான முறையில் பார்க்கச் செய்தல்.

(6) சுவாசம்:—மூக்கில் வாயின் பக்கத்தில் இரு துவாரங்கள் திறந்து மூடிக்கொள்கின்றன. அடிக்கடி நீர் குமுழிகள் வெளிவருகின்றன. ஜலத்தில் கரைந்துள்ள காற்றைச் சுவாசிக்கின்றது.

(6) நிதர்சனமான முறையில் பார்க்கச் செய்தும், விளக்கியும் சொல்லல் வேண்டும்.

முடிவு. மீனின் படம் போட்டு, அதில் அதன் கண்கள், துடுப்புகள், செதில்கள், சுவாசத்துவாரங்கள், வாய் முதலியவற்றை காட்டச் செய்தல்

அப்பியாசம் or இறுதிக் கேள்விகள்: மீன் எங்கு வாழும்? ஜலத்தில் ஊறிவிடாதா? அது எப்படி நகருகிறது? நகருவதற்கு உதவி புரிவது யாது? எப்படி சுவாசிக்கிறது? அதன் ஆகாரம் என்ன? மீனின் உபயோகம் என்ன?

கரும்பலகைச் சுருக்கம்:—மீன் நீரில் வாழ்வதற்கேற்றவாறு படகு போன்ற உருவமுள்ளது. துடுப்புகளால் நகருகிறது. ஜலத்தில் ஊறிவிடாமலிருக்க அதன் மேல் எப்பொழுதும் ஒரு எண்ணெய் கசிந்துகொண்டிருக்கும். அது ஜலத்திலுள்ள அழுக்குகளையும் மிருதுவான வஸ்துக்களையும் தின்னும். ஜலத்தில் கரைந்துள்ள காற்றையே சுவாசிக்கும். அது மனிதருக்கு ஆகாரமாய் உபயோகிக்கபடுகிறது. அதிலிருந்து எடுக்கப்படும் எண்ணெய் பல விருத்திக்காக உபயோகப்படுத்தப்படுகிறது.

விடுகதை விடைகள்

(கொத்து 37, மலர் 3, பக்கம் 71-ன் தொடர்ச்சி.)

விடைகள்:—(1) கப்பல். (2) வண்ணான். (3) பசு. (4) பலாப் பழம். (5) வெற்றிலை, பாக்கு, சுண்ணாம்பு. (6) பசு, அதன் கன்று. அதனருகில் பால்காரன் பால் கறத்தல் (7) நெருப்பு.

ஷை விடையளித்தவர்கள்:—J. Sundaram, Headmaster, Pannankombu. P. Susaimuthu, R. C. T. School, Trichy. S. Mariadas, Udayanathan, Karuppiah, A. Arokiaswamy & P. Subbiah, pupils, De Britto H. School, Devakottah. S. Antony, Panjampatti. M. Kamalammal, pupil, Kila Adanur, Tindivanam.

விளையாட்டுகள்

[M. A. Amirthanathan]

(சென்ற மாதத்தில் வெளியான, ஆரம்பப் பாடசாலைகளுக்கான விளையாட்டுகள்—தொடர்ச்சி.)

1. நரியும், கோழிக்குஞ்சுகளும் : (The Fox And The Chicken)

வகுப்பில் உள்ள பிள்ளைகளைச் சம எண்ணிக்கை உள்ள பல பகுதிகளாய்ப் பிரித்து, அவர்களை ஒருவர்பின் ஒருவராய் நிறுத்தி, பிந்தியவர்களை, முந்தியவர்களுடைய இடுப்பைச் சுற்றி கைகளை ஒட்டி கெட்டியாய் விரல்களைக் கோர்த்துக்கொள்ளும்படி செய்யவேண்டும்.

பகுதிக்கொருவராய்த் திறமையுள்ளவர்களைத் தெரிந்தெடுத்து, அவர்களுக்கு நரிகள் என்றும், அணித்தலைவர்கள், தாய்க்கோழிகள் என்றும், ஏனையோரை கோழிக்குஞ்சுகள் என்றும் பெயர் கொடுக்கவும்.

ஆடும் முறை : குறித்த நேரத்தில் ஆட்டத்தைத் தொடங்கி, நரிகள் தங்கள் தங்களுக்கு முன் நிற்கும் அணிகளில் உள்ள கோழிக்குஞ்சுகளை, கடைசியிலிருந்து ஒவ்வொருவராய்ப் பிடிக்க வேண்டும். ஆனால் அணித்தலைவர்கள் தங்களுடைய இரண்டு கரங்களையும் பக்க வாட்டமாக நீட்டி, நரிகள் தங்களுடைய குஞ்சுகளைத் தாக்கித் தொடாவண்ணம் காப்பாற்ற முயற்சிப்பார்கள். நரிகளால் தொடப்பட்டவர்கள் உடனே ஆட்டத்திலிருந்து நீங்க வேண்டும்.

ஒழுங்குகள் :

1. நரிகள் விரட்டித் தொடவரும்பொழுது குஞ்சுகள் முன் சொன்னபடியே கைகளைக் கோர்வைகளை விட்டுவிடாமல், தப்பி ஆட வேண்டும். கோர்வை எந்த இடத்தில் நீங்குமோ, அந்த இடத்திற்குப் பின்னுல் உள்ள எல்லோரும் பட்டுப் போவார்கள்.

2. நரிகள் தங்கள் தங்களுடைய அணியில் உள்ள கடைசிப் பையனை மாத்திரம் தொடலாம். அப்படித் தொட்டபின் அடுத்தவனைத் தொடுமுன் நரிகள் தங்கள் தங்களுடைய அணித்தலைவனுக்கு முன் வந்து போக வேண்டும்.

வெற்றி கணக்கிடும் முறை

இந்த ஆட்டத்திற்கு ஒன்றில் நேரம் குறிப்பிட்டோ அல்லது யாதாமொரு அணியிலுள்ள எல்லோரும் (Out) பட்டுப்போகும் வரையிலோ, தொடர்ந்து ஆடலாம். முதல் முறைப்படி நேரம் கழிந்த பின்னும், இரண்டாம் முறைப்படி ஒரு அணியிலுள்ள எல்லோரும் பட்ட பின்னும் ஆட்டத்தை நிறுத்து, எந்த அணியில் அதிகம் பேர் படாமல் இருக்கிறார்களோ, அந்த அணி ஜெயம் கொண்டதாய்க் கருதவேண்டும்.

2. குதிரைகளும் சவாரி செய்வோர்களும் (Horse-Men and Riders)

மாணவர்களை ஜோடி ஜோடியாகப்பிரித்து, ஒருவனைக் குதிரையாகவும் மற்றவனை சவாரி செய்வோனுகவும் நியமித்து, எல்லோரையும் ஓர் குறிப்பிட்ட எல்லைக்குள் நிறுத்தவேண்டும். முதல் உத்திரவு கொடுத்தவுடன் சவாரி செய்வோர் தங்கள் தங்களுடைய குதிரைகளின்மீது ஏறிக்கொள்வார்கள். இரண்டாம் உத்திரவு கொடுத்தவுடன் ஒவ்வொரு ஜோடியும், தங்கள் பக்கத்திலுள்ளவர்களைத் தாக்கிப் பணியச் செய்யவேண்டும். எக்கட்சி கடைசி வரையில் பணியாமல் அதாவது சவாரி செய்வோரின் கால்கள் தரையில் படாமல் இருக்கின்றதோ, அக்கட்சியினர் ஜெயம் அடைந்தவராவர்.

ஒழுங்குகள் :

1. இந்த ஆட்டத்தில் குதிரைகள் தங்கள் முதுகில் இருப்போரை கீழே இறங்க விடாமல் பிடித்துக்கொள்ளவும், எதிரிகளிடமிருந்து தப்பி ஓடவும் உதவி செய்வதைத் தவிர, மற்றப்படி பிற குதிரைகளின் கால்களைத் தட்டவோ (Trip), சவாரி செய்வோரை இழுக்கவோ கூடாது.

2. சவாரிசெய்வோரின் கை, கால்களைப்பற்றியும், கழுத்தைச் சுற்றியும் கைபோட்டு இழுத்து, அவர்களைப் பணியச் செய்யலாம். மற்றப்படி மூக்கு, காது, முடி முதலியவைகளைத் தொடவோ, பிடித்துத் தள்ளவோ கூடாது.

3. பல ஜதைகள் ஒன்று சேர்ந்து வலிய ஓர் ஜதையை தாக்கவும் செய்யலாம்.

4. தப்பி ஓடுங்கால், வட்டத்தைவிட்டு வெளிச் சென்றாலும், தவறி கீழே விழுந்தாலும், அவர்கள் பட்டவர்கள் (Out) ஆவார்கள்.

5. வகுப்பில் பெரிய, சிறிய மாணவர்கள் கலந்திருப்பின் அவர்களைத் தனித்தனியே பரித்து, ஆடவிடல் அவசியம்.

கணிதப்பகுதி

M. Kulandaisamy H. M., H. E. School, Palayam

வகுத்தல்

ஒரு பெரிய தொகையிலிருந்து 1 எண்ணைப் பல தடவை கழிப்பதற்கு பதில் சுருக்கமாய்ச் செய்வது வகுத்தல். (உ-ம்.) 16 மாம்பழங்களை 4 பேருக்கு கொடுத்தால் ஒரு ஆளுக்கு எத்தனை கிடைக்கும்? $16-4=12$. $12-4=8$. $8-4=4$. $4-4=0$ ஆக ஒரு ஆளுக்கு 4 பழங்கள் கிடைக்கும். இதையே $16 \div 4=4$ என்று சொல்லுவது. $\div$ இதை வகுத்தல் அடையாளம் என்று சொல்லுவது. இதிலுள்ள எண்கள் வகுக்கும் எண், வகுக்கப்படும் எண், ஈவு, மீதி, என்பவைகளையும் இவைகளால் கணக்கின் விடையை சரிபார்க்கும் விதத்தையும் மாணவர்களுக்கு எளிதாக கற்பிக்க

வும். (உ-ம்.) 39 ரூபாயை 3 பேருக்கு பங்கிடு. 39-ஐ 3-ஆல் வகுக்க வேண்டும் (அதில் வரும் ஈவுதான் விடை.)

இதற்கு அனுசரணையாக மூலாதாரவகுத்தல் சேர்க்கைகளில் —(90) தகுந்தபடி பயிற்சி ஏற்பட்டிருப்பது அவ்சியம். இதில் இரண்டு வகையுண்டு. (1) குறும் வகுத்தல். (2) நெடுவகுத்தல். ஆரம்ப பாடசாலைகளில் நெடுவகுத்தலையே கையாண்டு தேர்ச்சியடைந்தபிறகு, குறும் வகுத்தலை கற்பிக்கலாம்.

28 NOV 1946

குறும் வகுத்தல்:—

8 | 438
    54—6.

நெடு வகுத்தல் :—

```
     54
8 | 438
    40
    ——
    38
    32
    ——
     6
    ——
```

ஈவு எண்ணைக் கணிப்பது ஆரம்பத்தில் கஷ்டமாயிருக்கும். அதற்காக வாய்பாடு கீழ்கண்டபடி எழுதிக்கொள்ளவும்.

8, 16, 24, 32, 40, 48, 56, 64, 72, 80.

இந்த மலரோடு கணிதத்தின் முக்கிய அம்சமாகிய 4 விதிகளும் முடிவடைகிறது. அடுத்த மலரோடு பின்னம், சராசரி, லாப நஷ்டம் முதலிய முக்கிய வழிகளைப்பற்றி ஆராய்வோம்.

(தொடரும்.).

எதிர்பாருங்கள் ! எதிர்பாருங்கள் !!

R. C. செக்கண்டரி போதனமுறை & உயர்தர பாடசாலைகளின் நாடகக் கழகத்தினரால் மேற்படி பாடசாலைகளின் கட்டிட நிதிக்காக

"கிருஷ்ணஜி" அல்லது "நீதியின் வெற்றி"

என்னும் சரித்திர சம்பந்தமான நாடகம், பள்ளிக்கூட நாடக மேடையில் நவம்பர்-மீ 9-ம் உ அதிவிமரிசையாக நடைபெறும். இதனைக் கண்ணுறும் நம் பள்ளியின் பழைய மாணவர்களே, பூங்கொத்தின் நேயர்களே, மற்றும் ஸ்திரீ புமான்களே, இப்பள்ளிக்கூட கட்டிட நிதிக்காக நடைபெறவிருக்கும் இவ்வினிய நாடகத்தை யாவரும் கண்டு களிப்பதுடன், எம் நாடகக் கழகத்தினரையும் உற்சாகப்படுத்தும்படி விநயமாய்க் கேட்டுக் கொள்ளுகிறோம்.

Rev. Fr. A. Lourdusamy, B.A., L.T.,
Head Master & President.

M. Louis Selva Raj,
Secretary
Dramatic Association.
R. C. Sec. Trg. & High Schools.

கிராமச் சித்திரம்

பெருங்குறை

["தாதை கண்ணன்"]

அவள் அழுதாள்! ஆம், அவள் அழுதாள்! எப்போது?

நட்டநடு சாமம்!—சாமம்!!
நாரை கத்தும் வேளை!
ஒத்த நடு சாமம்!—சாமம்!!
ஓரி கத்தும் வேளை!

28 NOV 1946
MADRAS

அன்று அமாவாசை; இருள் தேவனின் ஆட்சி எங்கும் நிசப்தமாக நடைபெற்றது. அக்காரிருளில் மின்மினிப் பூச்சியின் வெளிச்சத்தைத் தோற்கடிக்கும் 'யூனியன் மண்ணெண்ணெய் விளக்குகள்' மட்டும் தம்முடைய மங்கிய ஒளியை வீசிக்கொண்டிருந்தன! இடையிடையே ஆந்தையின் அலறலும், நாரை, ஓரி, முதலியவற்றின் "உக்கூ......உக்கூ" வென்னும் கூக்குரல்களும் கேட்டன. அதைத்தான் ஒரு நாடோடி கவிஞன் மேலே கண்டபடி சித்தரித்தான்! ஆம், அந்த இரவு என் வாழ்க்கையிலேயே முதலுங் கடைசியுமான மறக்கக்கூடாத இரவு!!

அது ஒரு குக்கிராமம்! பொன்னுடனே மணி கொழிக்கும் புனல் மேவிய பொன்னி ஆற்றால் பொலிவுறுவது!! காலஞ்சென்ற என் காதல் தெய்வம் (மனைவி) தன் அன்பின் அளிப்பாக அளித்த என் ஏக மைந்தனை ஆனந்தனும் நானும் அவ்வூரிலே வசித்து வந்தோம். விதியின் விளையாட்டு எங்கள் வாழ்க்கையில் தென்றலாக வந்து பெரும் புயலாக மாறி வீசியது! அதனால் என் அருமை மனைவி அலைக்கழிக்கப்பட்டாள்! சின்னாட்களிலேயே, என் அன்பின் சின்னமாம் ஆனந்தனும், கடுங் காய்ச்சலால் கவ்வப்பட்டு, காலனுடன் கடும்போர் புரிந்து கொண்டிருந்தான்! ஆம், அந்த இரவில் என்னால் ....?

"கடவுளுக்கு நீ ஒருவன்தானா, கைப்பொம்மையாக அகப்பட்டாய்?" என்று என் மனது குறை கூறும் சமயம்—"நில்!" என்பது போன்ற அழுகுரல்!—ஆம்! ஓர் அணங்கின் அழுகுரல்!!

அந்த அணங்கு 'பகலில் அழுதால் பார்ப்பவர் சிரிப்பர்' என்றோ இரவில்—'நட்ட நடு சாமத்தில்', அழுதாள் போலும்! அந்த அழுகையுடன் எங்கேயோ 'பாம்பின் வாயில் மாட்டிக்கொண்ட தேரையின்' தீன புலம்பலும் ஐக்கியமாகிக் கொண்டது!! அன்றிரவில் 'வரண்டிருந்த' என் இதயத்திற்கு, அந்த இரு உயிர்களின் குரலொலிகள், ஆறுதலை அளித்தன!!!

காலைக் கடன்களை முடிக்க பொன்னி ஆற்றங் கரைக்குச் சென்றேன். இளமையின் செழுமையால் ஏவப்பட்ட பயிர்கள், பசுமையை அள்ளி வீசிக்கொண்டிருந்தன! காலைக் கதிரவன் இளம் பயிர்களுக்குப் பொன்னிற வர்ணம் பூசிக்கொண்டிருந்தான்!!

ஆங்கு—ஆற்றங்கரையின் நாட்டப்பட்டிருந்த ஏற்றத்தில்—நீர் இறைத்துக் கொண்டிருந்தவர்களுள் ஒருவன்,

"நட்ட நடு சாமம்!—சாமம்!!"

....

என்ற பாடலை மேற்கண்டபடி பாடினன்; இன்னும் பாடல் தொடர்ந்து கொண்டே போனது!!

"என் அழுதாய் பெண்ணே?—இளம்
மான் அழுதால் போல—மான் அழுதால் போல
உன்னை மாமன் அடித்தானோ?"

நான் திடுக்கிட்டேன்! என் வாழ்வின் அந்த மறக்க முடியாத இரவின் சம்பவம்தான் புதுமெருகிடப்பட்டு, ஒலியலைகளாய் வந்து என் காதுகளை உறுத்துகின்றனவோ?—என்று நினைத்தேன்! "இல்லை! இல்லை!! என் நினைவு பொய்!!!" என்று பின்னல் வந்த மொழிகளினின்று நானே தெரிந்துகொண்டேன்!

அங்கிருந்து சிறிது தூரத்தில்—மண்டும் பயிர்கள் தமை, நண்டு நிகர் விரல்களால், கொண்டுகளைவதாம்—காட்சிதந்த, பெண்டிர் கூட்டத்தில் ஒருத்தி:

"மாமன் அடிக்கவில்லை!—என்னை
மற்றவரும் தீண்டவில்லை!
புருஷன் அடிக்கவில்லை—என்னைப்
பெற்றவரும் தீண்டவில்லை!
கொழுந்தன் அடிக்கவில்லை!—என்னைக்
கொண்டவரும் தீண்டவில்லை!"

என்று—தொண்டை இனியகற்கண்டோ? மலரில் வரும் வண்டோ? என இசைக்கும் தண்டமிழ் இசை பாடி—மேலே கண்ட கவிஞனைப்போல் பதில் கொடுத்தாள், "மாமன் அடித்தானோ?" என்று கேட்ட ஏற்றக்காரனின் ஒரே கேள்விக்கு!

வழக்குரைக்கச் சென்ற கண்ணகியை அறிந்துகொள்ளாத பாண்டிய மன்னன், "யாரையோ நீ மடக்கொடியோய்?" என்று கேட்ட கேள்விக்கு, கற்பின் அரசியாம் கண்ணகியுரைத்த பதிலை, நான் ஞாபக மூட்டிக்கொள் ளும்படி செய்தன. கற்கண்டு தொண்டை கொண்ட தோகையின், இனிய மொழிகள்; இனிய மொழிகள்; ஆம், அந்த நாடோடிப் பாடல்!

ஐந்து பேர்களில் ஒருவரும் அவளை யடிக்கவில்லை; அது மட்டுமா? தீண்டவும் கூட இல்லையாம்! "அடிக்கவில்லை; தீண்டவில்லை;" என்று திருப்பித் திருப்பிச் சொல்லிவிட்டாள்! பின் ஏன் அவள் இளமான் போல் அழவேண்டும்! ஏதோ ஓர் 'பெருங்குறை' இல்லாமலா அப்படி அழுதாள்? சரி! அந்த பெரிய குறைதான் என்ன?

" பட்டியிலே கட்டிருக்கும்
பசுமாடுதான் வரடு!
குப்பைகளை சீச்சிவரும்
கோழிகளும் தான் வரடு!
விட்டத்திலே குந்தியிருக்கும்
குட்டபூனை தான் வரடு!"

என்ன ஏமாற்றம்! இதுதானா 'பெருங்குறை'? இவையெல்லாம்—பசு, கோழி, பூனை—'வரடு' ஆக இருந்தால் என்ன? இதற்காக ஆறறிவு படைத்த மனித ஜீவன்,—ஒரு பெண்—அதிலும் விவாகமானவள், 'கொண்டவரோடு' குடியிருப்பவள், 'நாரைகத்தும் வேளையில்,' உலக மெலாம் காதலிலே கண்மூடி துயில்கொண்ட சமயத்தில் அழுவதென்றால்......நான் நம்பவில்லை! "நம்பு!" அழுதாள் என்று நம்பு!! என்பதற்கு தெம்பு கூறின மொழிகள் பின்னால் வந்தன!

" இத்தனை வரடிருக்க
என்னையும் வரடு என்று
ஏசுராங்க மானிலத்தார்!

(நான்)

" தண்ணிக்குப் போகையிலே
தடமரிக்கப் பிள்ளையில்லை!—(நான்)
ஊருக்குப் போகையிலே
உடன்வர பிள்ளையில்லை!
அங்காடி கூடைகளை
அழைத்துவர மைந்தனில்லை!
வெங்காய கூடைகளை
விலைமதிக்கப் பிள்ளையில்லை!
கிண்ணியிலே போட்டசாதம்
கிள்ளிதிண்ண பிள்ளையில்லை!
மழைபெய்த வாசலிலே
மைந்தனடி காணேனே!
மருகி அழுகிறேனே!"

"ஐயகோ பாவம்! 'பிள்ளையில்லாப் பெருங்குறை' அவளை வாட்டுகிறது! கோடி குறைவுகளிலும் குழந்தையிலே குறைவின்முன், மற்ற குறைகளெல்லாம் எம்மாத்திரம்! சிறுகுழல் நீட்டிடும் செவ்விய இசையிலும், யாழின் நரம்புகள் யாக்கிடும் இனிமைப் பண்ணினும், மிக்க இன்பமுடையது, ஈடும் எடுப்பும் அற்ற இன்பமுடையது, குழந்தையின் கொச்சை மொழிகளன்றோ? இத்தகைய இன்பத்தை—குழந்தையின் மழலைமொழிகளை—சுவைக்கும் பாக்கியத்தை, அவளுக்கு ஆண்டவன் அருள்வில்லை! புத்திரப்பேறு அற்றவர் போகவேண்டிய 'புத்து' என்னும் நரகம் அவளை 'வாவா'! என்று அழைப்பதை அவள் சகிப்பாளா? துக்கம்

அவளை அறியாமல் நெஞ்சைப் பிளந்தது! நெஞ்சைப்—பிளந்து உள்ளே புகுந்த துக்கமானது, அழுகுரலாக மாறி, 'ஒத்த நடுசாமத்தில்' வெளி வந்தது! பெருங்குறையின் விளைவால், எரிமலையினின்று பொங்கிவரும் குழம்பையொத்த சோகத்தை, சிறிதளவாவது தணித்துக்கொள்ளலா மென்று, உண்டியையும் உறக்கத்தையும் ஒழித்து, அவள் அழுதாள், கண் களில் :நீர் ஒழுக மான்போல! ஆம்! இந்தப் பரந்த உலகத்தில் அவளுக்கு, வாய்விட்டு அழுவவுங்கூட இடமில்லையா?"

இவ்வாறான சிந்தனைச் சுருள் என்னுடைய ஒளியற்ற விழிகளின் முன்னே ஓடிக்கொண்டிருந்தது!

அன்றிரவில்—அந்த மறக்கமுடியாத இரவில்—வரண்ட என் இதயத்திற்கு அந்த இரு உயிர்களின் குரலொலிகள் பகலில் அழாமல் இர வில் அழுத அணங்கின் அழுகுரல், தவளையின் புலம்பல்—ஆறுதல் அளித் தன!

"அப்பா!......அப்பா!......அப்......!"

"ஆ! அப்பா! என் மகனே! ஆனந்தா! என் கண்மணி! என்ன? என் கண்மணி! என் அன்பின் சின்னம் இறந்துவிட்டதா? உண்மை யாகவா? நான் நம்பமாட்டேன்; அப்பா! ஆனந்தா!......ஆ!......காய்ச்ச லுடன் போராடிய உன் உயிரைக் காலன் கவர்ந்துவிட்டானா? என் அருமை ஆனந்தா! நீ இல்லாவிட்டால் எனக்கு என்ன இங்கு வேலை? உன் கண்கள் நீர் சிந்தினால் என் இதயம் இரத்தம் கக்கவில்லையா? உன் இன்னுயிரே போய்விட்டால் எனக்கு இவ்வுலகில் வேறு இலட்சியம் என்ன? அப்பா! மைந்தா! என் அருமை ஆனந்தா!!! ஆ!......"

அது ஒரு சுடுகாடு! கொல்லனின் உலைக்கூடம்போல் கொழுந்துவிட் டெரிந்தது! துர்க்கந்தத்திலே தோய்ந்து பளபளப்புடன் காட்சி அளித் தது அப்பாழும்—இல்லை—புண்ணிய பூமி! அந்தப் புனித இடத்தில்தான் அடக்கம் செய்யப்பட்டான் என் மகன்! ஆம், அவன் என்னைவிட்டுப் பிரிந்து எத்தனையோ ஆண்டுகளாகிவிட்டன!

பிள்ளையில்லாப் பெருங்குறை என்னைப் பீடித்து பிடுங்கித் தின்றது. நான் ஒருவன் மட்டும் கடவுளின் கைப்பொம்மையல்ல; அவளும் தான்! 'ஓரிகத்தும் வேளையில்,' மான்போல் அழுத அந்த அணங்கும் தான்! என்னுள்ளமும் அந்த அணங்கின் உள்ளமும் சோக நிலையில் ஒன்றாகவே படைக்கப்பட்டன போலும்!

"இத்தனை வரடிருக்க
என்னையும் வரடு என்று
எசுராங்க மானிலத்தார்!"
"மருகி அழுகிறேனே!"

என்ற அடிகள். என் இதயக்கடலில் அலையாக மோதிக்கொண்டிருப்பதின் மர்மம் என்ன?

[முற்றிற்று]

21006

சித்தார்த்தரின் துறவு (சரித்திரம்)

சிறுநடிப்பு

[A. Kathirvelu]

காக்ஷி 1.

இடம் :—சுத்தோதனரின் ஏகாந்த இடம். காலம் :—பகல். பாத்திரங்கள் :—சுத்தோதனர், மந்திரி (ஆழ்ந்தசிந்தனையுடன் உலாவி உட்கார்ந்துக்கொண்டே)

சுத் :—மந்திரியாரே! நமது மைந்தன் இளவரசனென முடிசூட்டியும் அவன் நிலை நோக்கும்போது அன்று சொன்ன பெரியாரின் வாய்மொழிகள் காதில் ஒலித்துக்கொண்டே இருக்கின்றன.

மந் :—அதையே எண்ணிக்கொண்டிருந்தால் அப்படித்தான் தோன்றும். நினைவுகளெல்லாம் சற்று விடுத்து நிம்மதிகொள்ளுங்கள் மகாராஜா!

சுத் :—இல்லை! எப்படியிருந்தபோதிலும் என் மனம் என்னவோ நிம்மதிக்கொள்ளவில்லை.

மந் :—வேந்தே! ஏகாந்தமொன்றே இன்பமளிக்கவல்லது. ஆதலின், தனிமையில் இருந்து இன்பமடையுங்கள்.

சுத் :—உண்மைதான் என் மனதிற்குமட்டும் ஏகாந்தமும் இன்பமளிக்க மறுக்கின்றது.

மந் :—அதற்காக வருந்தினல்மட்டும் இன்பமுறமுடியுமா? சாந்தி கிடைக்குமா? மகாராஜா.

சுத் :—அமைச்சரே! நீர் புத்திரன் இல்லாதவர் ஆதலின் அதன் பாசம், அறியாது அவ்வாறு துணிவுடன் கூறுகிறீர்.

மந் :—மன்னிக்கவேண்டும் மகாராஜா, நான் இராஜ விசுவாசமுடையவன். சித்தார்த்தங்களுக்கு மைந்தர் எங்களுக்கு மன்னர். இன்று சிற்றரசராயுள்ள அவர் நாளை எங்களின் வேந்தன் ஆதலின் வருந்துதலால் ஒன்ருகும் எல்லாம் அவன் செயலன்ருே? நம்மால் என்ன ஆகப்போகிறது. இதுவே என் கருத்து.

சுத் :—அப்படியானல் சித்தார்த்தனின் நிலை என்னவது?

மந் :—மனிதனென்றுவனே மற்ற உயிர்கள் அனைத்தினும் தலைமையாகத் தோன்றினும் அவன் சக்திக்கும் எட்டாதவிஷயம் ஒன்றுண்டு அதுதான் ஒரு மனிதன் எதற்காக உலகில் பிறந்திருக்கிருன் என்பது. பிறந்த ஒவ்வொருவருக்கும் ஈசுவரன் ஒவ்வொரு கடமையை வைத்திருக்கிருன். அவன் எதை முடிக்கத் தோன்றி இருக்கிருன் என்று திட்டமாக எந்த மனிதனும் தெரிந்து சொல்லவில்லை, தெரிந்து சொல்லவும் முடியாது. அண்டமெல்லாம் சாட்டை இல்லா பம்பரம்போல்.

மந் :—ஆட்டிவைக்கும் ஆண்டவனின் அற்புதரகசியம் இதில்தான் அடங்கியிருக்கிறது.

சுத் :—அப்படியானல் இதற்கொன்றும் வழியில்லையா?

மந் :—மன்னர்! மன்ன !! அவர் எப்பொழுதும் ஏதோ ஆழ்ந்த சிந்தனையில் இருப்பதின் நிமித்தம் அந்த சிந்தனையை போக்கவல்ல தகுந்த முறையை கையாடி முயற்சிப்போம்.

சுத் :—என்னசெய்யவேண்டும்? எனக்கொன்றும் தோன்றவில்லை. மைந்தன் மனதை மாற்றி மன்னனாக தோற்ற எம்முறையானாலும் பாதகமில்லை. தாங்களே அதன்படிச் செய்யவேண்டியதைச் சொல்லுங்கள்.

மந் :—அரசே! அவர் உலக துன்பங்கள் ஒன்றையும் அறியாதநிலையில் அந்தபுரத்திலேயே இன்பமாய்ச் சகல சுகபோகங்களுடனும் இருக்கச் செய்யவேண்டும்.

சுத் :—இன்று இருக்கும்நிலையைவிட இன்னும் எம்முறையைக் கையாளவேண்டும்.

மந் :—கவலையை ஒழிக்கவல்லது நாட்டியக்கலையல்லவா, ஆதலின் நாட்டியம் இன்பமளிக்கவல்லது. இன்னிசைக் கீதங்கள், வீணை, இன்னும் என்னென்ன உண்டோ அத்தனையும் கொண்டு அந்தப்புறத்தை அலங்கரிக்கவேண்டும்.

சுத் :—இவைகள்தானே, இப்பொழுதே வேண்டியவைகள் யாவையும் சித்தம்செய்யுங்கள். எப்படியாவது என் மகன் இன்புற்றால் போதும்.

மந் :—இப்பொழுதே எல்லா ஏற்பாடுகளையும் செய்கிறேன்.

காக்ஷி 2.

இடம் :—யசோதரையின் அந்தப்புறம்

பாத்திரங்கள் :—யசோதரை, தாதிகள், குழந்தை.

காலம் :—இரவு.

(விசனத்துடன் யசோதரை மஞ்சத்தில் அமர்ந்து ஆழ்ந்துயோசித்தல்.)

தாதி ஜீவவதி :—அம்மா, இத்தனை நேரமாகியும் தாங்கள் உறங்காதிருந்தால் உடல் நலம் என்னாகும்.

யசோதரை :—ஜீவவதி உறங்கக்கூடாது என்பது என் எண்ணமா? உறக்கம் வந்தால்தானே உறங்குவதற்கு என் சுவாமி! அவரின் நிலையை நோக்கும்போது என் நிலை எம்மாத்திரம்?

அதிருக்கட்டும் பிரபாவதி வந்துவிட்டாளா?

ஜீவ :—சீக்கிரமே வந்துவிடுவாள் நீங்கள் எதற்கும் கவலையுற வேண்டாம் (பாலைக் கொடுத்து) இதைமட்டும் குடித்துவிடுங்கள் (பிரபாவதி வருதல்.)

யசோதரை :— பிரபாவதி! வா அவர் எப்படி இருக்கிறார்? சந்தோஷமாக இருக்கிறாரா? (எதிர்கொண்டுபோய் சொல்லவேண்டியது)

பிரபாவதி :—பொறுங்களம்மா? பொறுமை கடலினும் பெரிது சற்று பொறுங்கள்.

யசோ :—(பிரபாவதி பின் தோளை அசைத்து) என்னடி விளையாடுகிறாய்! என் நிலையை அறிந்தால் நீ இப்படியெல்லாம் சொல்லமாட்டாய்.

பிரபாவதி :—(மஞ்சத்தில் உட்கார்ந்துக்கொண்டே) எல்லாம் தெரியும் அம்மா !

யசோ :—பின் என்ன சொல்லேன் ! சீக்கிரம் சொல்லேன் !! அவர் சந்தோஷமாக இருக்கிருரா ?

பிரபா :—அவருக் கென்னம்மா குறை அவர் இன்புற்றிருக்க என் னென்ன வேண்டுமோ அத்தனையும் அங்கு அமைத்துள்ளார்கள்.

யசோ :—அது சரி ! அதனுல் அவர் இன்புறுகிருரா ?

பிரபா :—என்னம்மா ! சொல்லுவதற்குள் இவ்வளவு அவசரம். தேவேந்திரன் மாளிகைக்கூட அப்படி இருக்காது.

யசோ :—ம்...(சிறிது சந்தோஷத்துடன்) அவற்ருல் அவர் மகிழ் கிருரா ?

பிரபா :—அவரை மகிழ்விக்கத்தானம்மா அத்தனை அலங்காரங்களும் (பாலைக் கொடுத்து) இதை முதலில் சாப்பிடுங்கள் பிறகு சொல்லுகிறேன்.

யசோ :—(ஜீவவதியைப் பார்த்து) என்ன ஜீவவதி ! நீயாவது அவளுக் குச் சொல்லேன்.

ஜீவவதி :—சொல்லுகிறேன் (பிரபாவதியைப்பார்த்து) நீ அம்மாவை சாப்பிடச் சொல்லு.

யசோ :—(வருத்தத்துடன்) என்ன பரிகாசம் ! எப்பொழுதும் இப் படித்தான்.

ஜீவவதி :—எங்களுக்காகவாவது சாப்பிடுங்கள். அவர் தங்கள் நிலையை அறிந்தால் எவ்வளவு கஷ்டப்படுவார் தெரியுமா ? அது மட்டுமோ ? பெரிய ராசாவேறு கோபித்துக்கொள்ளுவார். இதை மட்டும் சாப்பிடுங்கள்.

யசோ :—ம்...என்னமோ தொந்திரவு செய்கிறீர்கள். (பாலை சாப்பிடு தல்) சொல்லு சீக்கிரம்.

பிரபா :—எதைச் சொல்லுவது, எதை விடுவது. எல்லாவற்றையும் சொல்வதென்ருல் அவ்வளவும் நினைவில் இல்லை.

யசோ :—என்னடி இப்படி சொல்லுகிருய் ? நினைவில் வந்தவரையில் சொல்லேன்.

பிரபா :—சொல்லட்டுமா இங்கிருந்து போனேன். போனேனு ? போனேன் கேளுங்கள்.

யசோ :—(முகத்தை சுளிக்கிக்கொண்டு) போடி போனது வந்தது யாருக்குத்தான் தெரியாது. போகாமலா வந்தாய்.

பிரபா :—கேளுங்கள் பிறகு என்ன போங்கள்—அந்த அரண்மனையும், அதன் அழகையும் வர்ணிப்பதென்ருல் (மார்பில் கை வைத்து பெருமூச்சு விட்டு) அப்பா ! நான் ஒரு கவியாய் இருக்கக்கூடாதா ?

யசோ :—(ஆவலுடன்) அவ்வளவு அழகா ?

பிரபா :—ஆமாம் அதன் நாலுபுறமும் நறுமணம் கமழும் மலர்ச் சோலை கள் உள்ளே சென்றேன்—சபாமண்டபம். அப்பா எவ்வளவு விசாலம். அது மட்டுமோ ? இன்னும் கேளுங்கள், ஸ்படிகங்களைப் பரப்பி அதன் நடுவே நவ

ரத்தினங்களும், நாகரத்தினங்களும் நர்த்தனம் செய்கின்றன. பளபளவென மின்னும் தங்கச்சங்கிலிகள் அதில் தொங்கும் விளக்குகள் பரிமள தைலங்களால் நிரப்பப்பட்டு தாமரை நூலால் திரி போட்டு இரவில் எரிக்கப்பட்டிருப்பதே ஒரு தனி அழகு. இது மட்டுமோ எப்பொழுது பார்த்தாலும் இசைவாணிகளின் இனிமையான சங்கீதம். சதா கேளிக்கை, நாட்டியம் நல்ல வேளை தாங்கள் அங்கில்லாமல் இங்கிருக்கிறீர்கள்.

யசோ :—(புன்சிரிப்புடன்) அதென்னடி அப்படி சொல்லுகிறாய்.

பிரபா :—நீங்கள் மட்டும் அங்கிருந்தால் எவ்வளவு பொறாமை கொள்வீர்கள் தெரியுமா?

யசோ :—யார்மீது?

பிரபா :—யார்மீதா? என் அவர் மீதுதான்.

யசோ :—இதனால் நான் அவர்மீது பொறாமை கொள்வேனா.

பிரபா :—நீங்கள் நேரில் பார்த்தால்தானே தெரியும் இத்தனை வைபவங்களையும்.

யசோ :—(ஆவலுடன்) இதிலாவது என் சுவாமி இன்புறுகிறாரா?

பிரபா :—இன்புறுகிறார் ஆனால்......

யசோ :—ஆனால் என்ன?

பிரபா :—இடையிடையே மனோவிசாரம் தலை தூக்கிவிடும். அப்பொழுது ஆழ்ந்த சிந்தனை.

யசோ :—அப்படியானால் அவர்......

பிரபா :—கேளுங்கள் அம்மா இதற்குள்ளாக என்னமோ இளவரசர் உறங்குகிறவரையில் இத்தனை களியாட்டங்கள். அத்தனையும் இருந்தேயாகவேண்டும்.

யசோ :—(கை கூப்பிக்கொண்டு) அவர் பூரணமாய் இன்புறும் நாள் என்றோ இறைவா! நீயே யாவற்றையும் நேசிக்க வல்லவன்.

ஜீவவதி :—போகட்டும் நேரமாகிறது உறங்குங்கள் அம்மா. அவராவது ஒவ்வொரு சமயங்களில் இன்புறுகிறார், உண்ணுகிறார், உறங்குகிறார் என்றால் நீங்கள் மிக மோசமாய் இருக்கிறீர்கள். அவர்கூட இத்தனை நேரம் உறங்கியே யிருப்பார். உறங்குங்கள் அம்மா.

பிரபா :—ஆமாம் தூங்குங்கள் அம்மா (எல்லோரும் படுக்கைக்குச் செல்லுதல்)

(தொடரும்.)

சிறு கதை

குரங்கின் தந்திரம்

(C. Abraham)

ஒரு காலத்தில் சங்கநல்லூர் ஜமீன் மிகவும் புகழ்வாய்ந்திருந்தது. அச்சமீனைப்பற்றி அறியாதார் சிலரே. கருணைகவுண்டர் அதைப் பரிபாலித்துக் கொண்டுவந்தார். அவருக்கு அநேக ஏக்கர் நிலங்களும், தோட்டங்களும், தோப்புக்களும் இருந்தன. அவர் வீட்டில் கறவை பசுக்களும்,

எருமைகளும் பால்மாரி பொழிந்துகொண்டிருந்தன. ஆனால் அதில் ஒரு நொண்டி எருமையும் இருந்தது. அச்சமீனிலுள்ள குடிமக்களை அன்புடன் ஆதரித்து வந்தார்.

அவருடைய தோப்பு ஒன்றில் பல ஆண்டுகளாக வானரங்கள் இன்ப வாழ்வு வாழ்ந்து நாட்களைக் கழித்து வந்தன. ஒரு நாள் ஜமீன்தார் அத் தோப்பை விளை நிலமாக்கக் கருதி, தன் ஊழியனை அழைத்து தோப்பி லுள்ள மரங்களை வெட்டி வீழ்த்தும்படி கட்டளையிட்டான். கட்டளையைச் சிரமேற்கொண்ட அவ்வூழியன் கோடாலியைக் கையிலேந்தி மரங்களை வெட்ட ஆரம்பித்தான். மரங்களை வெட்டும் சத்தத்தைக் கேட்ட குரங்கு கள் உயிரைப் பரி கொடுத்தாற்போல் விசனப்பட்டன. ஒவ்வொரு மரமும் வெட்டி வீழ்த்தப்பட குரங்குகள் அடுத்த மரங்களைத் தாவிக் கொண்டிருந் தன. தோப்பிலுள்ள மரங்களெல்லாம் வெட்டப்பட எஞ்சி இருந்த கடைசி மரத்தையும் ஓர் வெட்டுப் போட்டான். இட நெருக்கமுற்ற வான ரங்கள் ஊழியனிடம் சரண் புகுந்து ஐயனே! நாங்கள் இத்தனை ஆண்டு களாய் இத்தோப்பில் இனவிருத்திச்செய்து இன்பமுடன் வாழ்ந்து வந் தோம், இனி நாங்கள் எங்கு குடி புகுவோம். எங்கள் பேரில் மனமிரங்கி இவ்வொரு மரத்தையாகிலும் வெட்டாதுவிட இறைஞ்சுகிறோம் என்றன. ஊழியனோ அவைகளின் மன்றாட்டுக்கிரங்கினனே ஒழிய தன் எஜமானன் இட்ட கட்டளையை அவைகளுக்கு எடுத்தோதினன். வானரங்கள் எல் லாம் ஒன்றுகூடி அவ்வூழியனிடம் கீழ் கண்டதை விண்ணப்பித்தன. ஐய னே! இவ்வொரு மரத்தையாவது வெட்டாது விடுவீரேயாகில் வருஷத் திற்கு நூறு பழங்கள் கொடுப்போம் என்று மன்றாடின. ஊழியனோ அவ் விண்ணப்பத்திற்கிணங்கித் தன் எஜமானனிடம் போய் மேற்கண்ட குரங்கு களின் விண்ணப்பத்தைப் பகர்ந்தான். ஜமீன்தாரோ யோசனையிலாழ்ந்து உபயோகமில்லாத மரத்திற்காக இவ்வளவு பழங்கள் கிடைக்கிறதே என்று எண்ணி குரங்குகளின் வேண்டுகோளுக்கிணங்கினன். குரங்குகளும் இன் பமுற்று வாழ்ந்தன.

இச்சம்பவங்களுக்கிடையில் ஆகாரத்தைத் தேடி சென்றிருந்த ஓர் நொண்டி வானரம் திரும்பியகாலை வானரங்கள் ஜமீன்தாரிடம் செய்து கொண்ட விண்ணப்பத்திற்கும், மரங்கள் வீழ்த்தப்பட்டிருப்பதையும் கண்டு பொங்கி எழுந்தது. ஜமீன்தாரை இனி விடுவதில்லை என்ன பாடு படுத்து கிறேன் பாருங்களென்று மற்ற குரங்குகளிடம் வீம்பு படித்துவிட்டு ஜமீன் தாரின் வீட்டை நோக்கிப் புறப்பட்டது.

இரவு 8 மணி இருக்கும் அன்று உலகம் இருளால் விழுங்கப்பட்டிருந் தது. ஜமீன்தாரும் தன் இரவு ஆகாரத்தைக் கழித்துத் திண்ணையில் அமர்ந்துத் தாம்பூலம் தரித்துக் கொண்டிருந்தார். கோபப் பெருக்கேற்ற அவ்வானரம் திண்ணையின் கீழ் பதுங்கிக் கொண்டிருந்தது. நொண்டி எருமைத் தன் வீட்டை யடையாததைக் கண்ட ஜமீன்தார் ஊழியனைக் கூப்பிட்டு எருமையின் மேல் கொண்ட கோபத்தால் அடேய்! "அந்த

நொண்டிக்கழுதை" வந்ததா? இல்லையா? என்று கேட்டான். ஊழியன் வரவில்லை என்று சொன்னதும் ஜமீன்தார் அதைப் போய் தேடிப்பிடித்து வா என பகர்ந்தார். பதுங்கி இருந்த நொண்டி வானரம் குடல் நடுங்க அவர் நொண்டி என்றபோது நம்மைத்தான் தேடிப்பிடித்துக் கொண்டு வரும்படி சொல்லி இருக்கிறார் இனி நம் கதி என்னவாகுமோவெனப் பயந்துக்கொண்டிருந்தது. இனி நாமே அவனிடம் போய் ஏதாவது மாற்றிச் சொல்லித் தப்பிக்கவேண்டிய வழி தேடவேண்டுமென நினைத்து, மெல்ல அவனிடம் போய் வணங்கி நின்றது. ஜமீன்தார் எங்கு வந்தாய் என்று அதட்டிக் கேட்கவே வானரம் நாவு பிறழ உம், உம், ஒன்றுமில்லைங்கோ, முன் வானரங்கள் செய்துக்கொண்ட ஒப்பந்தத்தின்படி பழங்கள் கொண்டுவரவேண்டும். அவை ஒரே மாதிரியான பழங்களா? அல்லது பலமரத்தின் பழங்களா? வென கேட்டுப்போக வந்தேன் என்று தந்திரமாகச் சொன்னது. ஜமீன்தாரும் பல மரங்களின் பழங்களைச் சுகிக்கக் கருதிப் பல மரத்தின் பழங்களைக்கொண்டு வாவென கட்டளையிட்டார். வானரமும் அவரிடம் விடைப் பெற்றுக்கொண்டு தப்பித்தோம் பிழைத்தோமென ஓடி மற்ற வானரங்களிடம் தான் ஜமீன்தாரிடம் தந்திரம் செய்துத் தப்பித்துக்கொண்டு வந்ததைப்பற்றி மகிழ்ந்தது.

விடுகதைகள்

இது என்ன?

1. மடியிலே அடங்குமது கடைசியிலே கிடந்து உருளுது.

2. ஆகாயத்தில் பறக்குமது, அரைநொடியில் போகுமது, உயிருடன் உள்ளத்து, நெஞ்சைப்பிளந்தால் இரத்தம் இல்லை.

J. Sundaram.

3. மஞ்சள்பெட்டி மரக்கால்பெட்டி ஒருநாளும் திறவாப்பெட்டி.

4. உமியைப்போல் பூ பூக்கும், சிமிழைப்போல் காய் காய்க்கும்.

P. Susaimuthu.

5. ஒரு புட்டியில் இரண்டு தைலம்.

S. Mariadas.

6. பெட்டியில் இருப்பர் இருவராய், அண்டையில் இருப்பர் சிலராய் வெளியே வருவார் ஒருவராய்.

K. A. Arokiasamy, Sendarapatty, Attur.

7. கிறுக்குப்பிடித்து வெளியேபோய், கிணற்றில் விழுந்த கிளிப்பிள்ளை, உயிரில்லா உடலோடு உற்றசெய்தி சொல்லப்போகிறது.

R. Jesudas, Karunapuram, Kallakurichi.

நாடகக்கலை

[M. Louis Selvaraj, Secretary.]
(R. C. T. S. Dramatic Association.)

இன்றைய உலகில் நாடகக்கலை ஒரு சமூதாய சக்தியாக விளங்குகிறது. இதன்மூலம் கல்விபரப்பலாம், கலை வளர்க்கலாம், பிரசாரம் செய்யலாம், காட்சி, பாட்டு, வாத்தியம், நடனம், காவியம், ஓவியம், சிற்பம் எல்லாம் ஒருங்கே சேர்ந்து கண்ணுக்கு விருந்தாகி நெஞ்சை அள்ளுகின்றன. நாடகவேட்கையில் மயங்காதவரில்லை. உணவும் நீரும்போல் நாடகங்கள் வாழ்விற்கு அவசியமாய்விட்டது.

தமிழை இயல், இசை, நாடகம் என மூன்று பிரிவுகளாகப் பெரியோர் வகுத்துள்ளனர். இயற்றமிழ், இசைத்தமிழுக்கும் நாடகத்தமிழுக்கும் முன்னர்த் தோன்றியது. இசைத்தமிழின்கண் கீர்த்தனங்களும், வாய்ப்பாட்டுகளும், சிந்து, ஆனந்தக்களிப்பு, கும்மி, தெம்மாங்கு, முதலியனவும் அடங்கும். உலக இயல்பையும், வாழ்க்கை நிகழ்ச்சிகளையும் உள்ளதை உள்ளவாறே புனைந்துகாட்டுவதும், கேள்வியின்பத்தோடு காட்சியின்பத்தையும் கொடுப்பது நாடகத்தமிழாகும்.

ஐரோப்பிய நாடகங்கள் நவரசங்களுடன் பேசி நடிப்பதையே முக்கியமான அம்சமாகக் கொண்டுள்ளது. நடிப்புக்கலை நமது நாட்டில் எவ்வளவோ வளரவேண்டும். நம்மவர் ஷேக்ஸ்பியர், ஷெரிடன், ஷா, போலியர், ஷல்லர், ராஸின், கொர்நெல் முதலிய சிறந்த புலவர்கள் நாடகங்களைப் படித்தும், நடித்தும் பழகவேண்டும். அந்த நாடகங்களில் ஒவ்வொரு வரியும் ரஸம் சொட்டும்; நடிப்புக்கலையின் நுட்பங்கள் ஒவ்வொரு காட்சியிலும் நிறைந்துள்ளன. நடிப்பு ஓர் அரியகலை. இயற்கை அறிவுடன் தக்க பயிற்சியும் சேர்ந்தால்தான் நடிப்புச் சுகம்பெறும். நடிகர்களிடையே உயர்ந்த சன்மார்க்க நடைபெறவேண்டும். நாடகக்கலையில் கருத்தும் கல்வியும், திறமையும் உயர்ந்து சிறத்து சிறந்து விளங்கவேண்டும். நடிப்புக்கலை பழகப் பள்ளிக்கூடங்கள் ஏற்படவேண்டும். உலகிற் சிறந்த நாடகங்களை நடித்துப் பழகி, பிறகு மேடையிலே நடிக்கவேண்டும். நவரச பாவனைகளையும் நன்றாக உணர்ச்சியுடன் நடிக்கவேண்டும். நாடக ஆசிரியர்களும், கதையாசிரியர்களும் தம்மைச் சுற்றிலுமுள்ள மக்களையும், அன்னார்தம் வாழ்க்கைகளையும், இயல்புகளையும் கூர்ந்து நோக்கி சிறந்த கதைகளைப் புனைதல்வேண்டும். உலகமே ஒரு நாடகமேடையன்றோ? இவ்வரிய நாடகக்கலையை ஆரம்பப் பாடசாலையிலிருந்தே மாணவர்கட்குப் புகட்டிவருதல்வேண்டும். நடிப்புமுறை கீழ் வகுப்புகளிலேயே அமையப்பெற்றால் நற்பயன்கள் அளிக்குமென்பதில் சந்தேகமில்லை. நடிப்புமுறையால் மாணவர்களின் அச்சம், கூச்சம் முதலியவைகள் அகற்றப்படுகின்றன; பேச்சு, உரையாடல் நடிப்புத்திறன்களை வளர்க்கும். கேட்டறிவதைவிட

கண்டறிவது நன்ருய் பசுமரத்தாணிபோல் மனதில் பதியுமன்ருே? பாடங்களில் பற்றையும், கவர்ச்சியையும் உண்டுபண்ணும். மாணவர்களின் மனஎழுச்சிக்குரிய மெய்ப்பாடுகள் நடிப்பு, பேச்சு, உரையாடல்களால் வெளிப்படுவதற்கு இது ஒரு நல்ல மார்க்கம். பொதுவாக மாணவர்கள் தங்கள் வீடுகளில் நடக்கும் நிகழ்ச்சிகளை உற்றுநோக்கி, அவற்றைப் பார்த்து, தாமும் செய்து நடிப்பதை, அவர்கள் விளையாட்டை அவர்கள் அறியாமல் கவனிப்போர் உணரலாம். பெற்ருேர், ஆசிரியர், கடைக்காரன், வண்டி ஓட்டி முதலியவர்களைப்போலவும் சிறுவகுப்புகளில் நடிக்கச்செய்ய லாம். ஆரம்பவகுப்புகளில் சிறு கதைகளையும், சரித்திர சம்பந்தமான கதைகளையும் சம்பாஷணைமூலம் நடிக்கச்செய்யலாம். ஆரம்பவகுப்புகளில் இவ்வாறு நடிக்கச்செய்வதானது பிள்ளைகளுக்கு மிகுந்த உற்சாகத்தைக் கொடுக்கும் விஷயங்கள் சுலபமாக மனதில் பதியும், கூச்சமில்லாமல் பேசும் சக்தியும் ஏற்படும். மத்தியதரப் பாடசாலைகளிலும், உயர்தர ஆரம்பப் பாடசாலைகளிலும், இந்நாடகக்கலையை நன்கு பயிற்சிக்கவேண்டும். மாணவர்களுக்குத் தக்க பயிற்சியளித்து, பள்ளிக்கூட வைபவங்களில் அறிவையூட்டக்கூடிய கதைகளை நடிக்கச்செய்யவேண்டும். நாடகங்கள் உலக இயல்பையும், வாழ்க்கை நிகழ்ச்சிகளையும், உள்ளதை உள்ளவாறே புனைந்துகாட்டுவனவாகவும், சன்மார்க்க போதனை நிறைந்ததாகவும் இருக்க வேண்டும். இக்கலையை மாணவர்களுக்குப் புகட்டவேண்டுமானுல் ஆசிரி யர்கள், தங்களுடைய போதனுமுறைப் பாடசாலையிலேயே தக்க பயிற்சி பெறவேண்டும்.

'பாட்டும் பரதமும் பண்புள்ள நாடகமும் நாட்டுக்கு நல்ல நலன்' என்றபடி ஒவ்வொரு ஆசிரியரும் தக்க பயிற்சி பெற்று, மாணவர்களையும் பயிற்சிப்போமானுல் அவர்கள் பிற்காலத்தில் சிறந்த நடிகர்களாகவும், தெளிந்தபேச்சாளர்களாகவும், கவித்திறன், கற்பனைத்திறன் பெற்றவர்க ளாகவும் ஆவார்கள் என்பதில் கிஞ்சித்தும் ஐயமில்லை.

ஏழையின் கண்ணீர்......!

'ஹென்றி' எழுதிய புதிய தொடர்கதை

(அடுத்த மாதம் "**பூங்கோத்தில்**" வெளிவரும்)

எல்லாருக்கும் இருதயத்தைத் தந்த தெய்வம் எல்லோருக் கும் செல்வத்தைத் தரவில்லை! பிரேம்குமார் ஏழைதான்!...... ஆனுல்......அவனுக்குரிய தாயன்பு அவனை கொள்ளைக்காரனுக ஆக்கிவிட்டது!......அந்த ஏழையின் கண்ணீர்......கல்நெஞ்ச ஞன டாக்டர் ஜெகதீஸனின் குடும்பத்தை நிர்மூலமாக்கிவிட் டது. ஏழையின் கண்ணீர் கூரிய வாளல்லவா?

கல்விச் சங்கங்கள்

மேலூர் தாலுகா, நத்தம் பஞ்சாயத்து போர்டு ஏரியாவில் 2-9-46-ம் தேதி முதல் கட்டாயக் கல்வி அமுலுக்கு வந்திருக்கிறது. இது சம்பந்தமாக 31-8-46-ம் தேதி நத்தம் போர்டு உயர்தர ஆண் பாடசாலையில் ஆரம்ப விழா மிக விமரிசையாக நடத்தப்பட்டது. மதுரை ஜில்லா போர்டு உப தலைவர் திருவாளர் V. பசுபதி முதலியாரவர்கள் தலைமை வகித்தார்கள். போர்டு கல்வி அதிகாரி திரு. S. வடிவேல் B.A., L.T. அவர்களும், மேலூர் ரேஞ்சு டிப்டி இன்ஸ்பெக்டர் திரு. K. கந்தசாமி B.A., L.T. அவர்களும், நத்தம் பங்கு சுவாமியார் சங்கை. மோத்தா சாமி அவர்களும் "கட்டாயக் கல்வி" என்ற பொருளின்மேல் சொற்பொழிவு நிகழ்த்தினார்கள். மதுரை ஜில்லா போர்டு காரியதரிசி திரு வேதாச்சலம் அவர்களும், இதர பிரமுகர்களும் ஏராளமாய் விஜயம் செய்தனர். தலைவர் பாடசாலை ஆசிரியர்களின் முயற்சியைக் குறித்து மிகவும் சிலாஹித்து பேசினார்கள். 1000 மாணவர்களுக்கு சிற்றுண்டி பரிமாறப்பட்டது. ஊர்வலமும் நடத்தப்பட்டது. கூட்டங்களிலும் ஊர்வலங்களிலும் T. R. C. மாணவர்கள் அதிக உதவி செய்தார்கள்.

S. Royappen,
Headmaster.

பாளையங்கோட்டை

26-9-46-ல் நாரணம்மாள் புரத்தில் திரு இருதய சகோதரர்களால் நடத்தப்படும் செண்ட் ஜோசப் H. E. பள்ளிக்கூட வருடாந்திர விழா உயர் திரு. D. ஜோசப் B.A., L.T. தாலுகா கல்வி அதிகாரி அவர்கள் தலைமையின் கீழ் மிகச் சிறப்பாக நடைபெற்றது. பந்தய விளையாட்டில் தேர்ச்சி பெற்ற மாணவ மாணவிகளுக்கு தலைவரால் பல பரிசுகள் வழங்கப்பட்டது. பின் "பெற்றோர் கடமை" என்பதைப்பற்றியும் தேசத்துக்கும், தேவனுக்கும் மாணவர் செய்யும் சேவை பற்றியும் அரியதோர் சொற்பொழிவு ஒன்று ஆற்றினார்கள்.

பின் பள்ளி மாணவ மாணவிகளுக்கு D. வடிவேல் சித்திராசிரியரவர்களால் மிக திறம்பட பயிற்றுவிக்கப்பட்ட அதி அற்புத பரத நாட்டியமும் பலவித டிரில்களும் "கெடுவான் கேடு நினைப்பான்" என்ற நாடகமும் அதி விமரிசையாக நடைபெற்றது. இவைகளை கண்ணுற்ற ஏராளமான ஜனங்கள் இப்பேர்ப்பட்ட காட்சிகளை இதுவரையும் எங்கும் கண்டதில்லையே என்று ஒருவாய்பட கூறினார்கள். பின் ஜே ஹிந்து என்ற கோஷத்தோடு இனிது முடிவுற்றது.

" அய்யம்பாளையத்தில் கட்டாயக் கல்வி "

திண்டுக்கல் தாலுகா அய்யம்பாளையம் ரெவினியூ கிராமத்தில் 2-9-46 தேதி முதல் அமுலுக்கு வந்துள்ள கட்டாயக் கல்வி சம்பந்தமாய், 18-9-46 தேதி முதல் அய்யன்கோட்டையில் ஸ்ரீ A. சேதுபதி அவர்களாலும், சின்னுக் கவுண்டன் பட்டியில் ஸ்ரீ சுப்பையா அவர்களாலும், 20-9-46-ம் ௳ அய்யம்பாளையம் யூனியன் டவுன் 6-வது வார்டில் மதுரை ஜில்லா போர்டு எடுகேஷனல் ஆபிசர் S. வடிவேலு பிள்ளை அவர்கள் முன்னிலையிலும், 23-9-46 தேதி 8-வது வார்டில் ஸ்ரீ K. G. சுப்பிரமணிய அய்யர் அவர்களாலும், 24-9-46 தேதி 6-வது வார்டில் மற்றொன்று ஸ்ரீ திருமலுசாமி கவுண்டரவர்களாலும் திறக்கப்பட்டு தீவிரமாய் வேலை செய்து வருகின்றன.

நீண்டகாலமாய் அய்யம்பாளையம் சென்டரில் நடைபெற்றுவந்த ஆரம்ப ஆசிரியர்கள் சங்கம், ஆங்காங்கு ஏற்பட்ட பல காரணங்களால் முறையே, பட்டிவீரன்பட்டி, வத்தலக்குண்டு, ஆத்தூர் சென்டர்களுடன் இணைக்கப்பட்டு பின் இச் சென்டரின் ஆசிரியர்களுக்கு ஏற்பட்ட கஷ்டத்தையும், ஷை ஆசிரியர்களால் அனுப்பப்பட்ட மகஜரையும் சீர்தூக்கி, அய்யம்பாளையத்தில் ஒரு சென்டர் இருப்பது அவசியம் என்பதற்காக, திண்டுக்கல் ரேஞ்சு கனம் டிப்டி இன்ஸ்பெக்டரவர்களுடைய R. C. 316 of 46 D 7-7-46 உத்திரவுப்படி 1946 வருஷம் ஜூலை-மீ 4-வது வாரம் முதல் அய்யம்பாளையம் போர்டு ஆண் பாடசாலையில் " ஆரம்ப ஆசிரியர்கள் சங்கம் " துவக்கப்பட்டு நாளுக்குநாள் விருத்தியடைந்து வருகிறது.

Secretary,
Teachers Association, Ayampalayam

தம்பிப் பாட்டு

[நல்லை—அ. இளங்கோவன், உப்பந்தூர்]

சின்னஞ் சிறியவனே தம்பி !— அண்ணன்
செப்பிடும் மொழிகளைக் கேள் நீ !
பொன்னிற் பொருளிற்பெரி தென்றே—என்றன்
புத்திமதியினைப் பின் உணர்வாய் ! (1)

பாலப்ப ருவமிதில் தம்பி !—என்றும்
பாடசா லைக்குநீ சென்றே
சாலப்ப டித்திடடா தம்பி !—அதைச்
சங்கட மாகஎண் ணாதே ! (2)

ஐந்தில் வளையாத கொம்பு—பின்பு
ஐம்பதில் வளையாது தம்பி !
இந்த இளம்பருவத்தில்—கல்லா
திருந்திடிற் பின் முடியாது ! (3)

Reg. No. M. 1534.

எந்நாளும் அழியாத செல்வம்—கல்வி !
எங்கும தற்குத்தான் மதிப்பு !
பன்னாளும் முயன்றதைச் சேர்த்தல்—இந்தப்
பாரினில் மக்களின் கடமை ! (4)

காலத்தில் பள்ளிக்குச் செல்க !—அங்கு
கவனமாய்ப் பாடங்கள் கற்க !
காலத்தின் அருமையை யெண்ணி—அதைக்
கழிவின்றிக் காப்பாற்றிக் கொள்க ! (5)

ஆசான் சொன்னவை யெல்லாம்—நெஞ்சின்
ஆழத்தில் பதிவாகச் செய்க !
கூசாமல் தெரியாத தெல்லாம்—அந்தக்
குருவினிடம் கேட்டுத் தெளிக ! (6)

பாடம் புகட்டுமா சிரியர்—மனப்
பக்குவப் படியவர்க் கடங்கிக்
கூடப் படிக்கின்ற தோழர்—உடன்
கூடிக்கு லவிடுவாய் தம்பி ! (7)

வீணர்க ளோடுற வாடிக்—கல்வி
வீணாகச் செய்துவி டாமல்
காணுங்கலைகளி லெல்லாம்—உன்றன்
கருத்தினைச் செலுத்துவாயடா ! (8)

பாடப் புத்தகம் ஒன்றை—மட்டும்
படிப்பதுடன் நின்றிடாமல்
தேடிப் பலநல நூல்கள்—கற்றுத்
தேர்ந்திடு வாயடா தம்பீ ! (9)

உள்ளம் உரம் பெற வேண்டும்—எனில்
உடல் உரம் பெற்றிடல் வேண்டும் !
பிள்ளைக ளொடுவிளை யாடி—நீயும்
பெருக்குக உடலுரம் தன்னை ! (10)

21006

Editor and Publisher: Rev. Fr. A. Lourduswami, B. A., L. T.,
Headmaster, R. C. Secondary Training and High School.

Printed by Rev. Fr. A. Susai Regis
Supt., St. Joseph's Industrial School Press, Trichinopoly.
Q. H. No. Ty.—1, 12—10—1946.